**<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>**

<u>MCOP No: 46/2021</u>

2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ம் நாள் Rw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன்படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஏ. கிருஷ்ணகுமார் | ஜாதி | |
| த.க.பெயர் | அர்த்தனாரி | மதம் | |
| கிராமம் | | தொழில் | எலும்பு முறிவு மருத்துவர், ஈரோடு டிரஸ்ட் மருத்துவமனை |
| மாவட்டம் | | வயது | 40 |

**<u>எம.சா.1 நாள் 25.10.2024</u>**

<u>முதல் விசாரணை:</u> **(சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் ஈரோடு டிரஸ்ட் மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக பணியாற்றுகிறேன். ஈரோடு டிரஸ்ட் மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணியாற்றிய மருத்துவர் திரு. பெரியசாமி வயோதிகம் காரணமாக தற்போது மருத்துவனையில் பணியாற்றவில்லை, கடந்த 3 ஆண்டுகளாக அவர் மருத்துவமனைக்கு வரமுடியாமல் வீட்டிலேயே உள்ளார். எனவே ஆவணங்கள் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க இன்று நான் ஆஜராகியுள்ளேன்.

1) இந்த வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க அதிகாரப்படுத்தி ஈரோடு டிரஸ்ட் மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்ட அதிகார கடிதம் **எமசாஆ** 1.

அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேதுராமன் மகன் ராஜாராமன் என்பவருக்கு 21.12.2020 ல் வழங்கப்பட்ட காயச் சான்றின் கார்பன் காப்பி எடுத்து வந்துள்ளேன். அதன் உண்மை நகல் இந்த வழக்கில் மசாஆ 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது தான். மேற்படி மசாஆ 6 ல் மேற்படி ராஜாராம் 21.12.2020 அன்று இரவு 11.30 மணிக்கு சாலை விபத்தில் அடிபட்டதன் காரணமாக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்த மருத்துவர் பெரியசாமி அவரின் மூச்சுக் காற்றில் மது வாடை இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ராஜாராமிற்கு நான் நேரடியாக சிகிச்சை அளிக்கவில்லை என்றும், அவருக்கு காயச்சான்று வழங்கவில்லை என்றும், ஆவணங்கள் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. உடல் உபாதைகள் காரணமாக மருந்து உட்கொள்ளும் நபரிடமிருந்து மது வாடை வர வாய்ப்புள்ளது என்றால் cough சிரப் போன்ற மருந்து உட்கொள்ளும் சமயம் மது வாடை ஏற்பட வாய்ப்புள்ளது. அவ்வாறு அவர் எதுவும் மருந்து உட்கொண்டாரா என்ற குறிப்புகள் எங்கள் மருத்துவ ஆவணங்களில் இல்லை என்றால் ஆமாம். மேற்படி ராஜாராமிற்கு ரத்தத்தில் ஆல்கஉறால் கண்டன்ட் எவ்வளவு என்று கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் ஆமாம்.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 25.10.24
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS